# மாமறை புகழும் மரியென்னும் மலரே

மாமறை புகழும் மரியென்னும் மலரே
மாதரின் மா மணியே

**1**
அமலியாய் உதித்து
அலகையை மிதித்து
அவனியைக் காத்த ஆரணங்கே
உருவிலா இறைவன் கருவினில் மலர
உறைவிடம் தந்த ஆலயமே

**2**
பழியினைச் சுமந்த உலகினில் பிறந்து
ஒளியினை ஏற்றிய அகல் விளக்கே
இருள் திரை அகற்றி அருள் வழி காட்டி
வானக வாழ்வை அளிப்பாயே

**3**
வாழ்வினில் வளமே வறுமையில் பலமே
வான் வழி காட்டும் தாரகையே
கலங்குவோர் கதியே
கருணையின் நிதியே
கவலைகள் தீர்க்க வருவாயே